ஓம் சக்தி

# ஆயிரத்தெட்டு

# போற்றி மலர்கள்

| | | | |
|---|---|---|---|
| ஓம் | ஓமெனும் மந்திரத்துட் பொருள் | போற்றி ஓம் | |
| ஓம் | அன்னை மருவத் தூராள் | போற்றி ஓம் | |
| ஓம் | உயர்வற உயர்நலம் உடையாய் | போற்றி ஓம் | |
| ஓம் | துன்பம் துடைக்கும் துணையே | போற்றி ஓம் | |
| ஓம் | அரியணை மேலமர்ந் தாள்வாய் | போற்றி ஓம் | |
| ஓம் | ஞாலம் காக்கும் நாயகி | போற்றி ஓம் | |
| ஓம் | ஞானக் கனல்விளை பரம்பொருள் | போற்றி ஓம் | |
| ஓம் | பண்டனை மகிடனை அழித்தாய் | போற்றி ஓம் | |
| ஓம் | சும்ப நிசும்பரை வதைத்தாய் | போற்றி ஓம் | |
| ஓம் | ஆயிரங் கதிரொளி கொண்டாய் | போற்றி ஓம் | 10 |
| ஓம் | ஐவகை வடிவுகொள் ஐயை | போற்றி ஓம் | |
| ஓம் | சண்பகம் புன்னை சூடினை | போற்றி ஓம் | |
| ஓம் | மணிபுனை முடியினைத் தரித்தாய் | போற்றி ஓம் | |
| ஓம் | பிறையென இலங்கிடும் நெற்றியள் | போற்றி ஓம் | |
| ஓம் | மான்மதத் திலகம் வைத்தாய் | போற்றி ஓம் | |
| ஓம் | வில்லெனப் புருவம் கொண்டாய் | போற்றி ஓம் | |
| ஓம் | கயலெனக் கண்ணிரண் டுடையாய் | போற்றி ஓம் | |
| ஓம் | அன்றலர் சண்பக நாசியள் | போற்றி ஓம் | |
| ஓம் | விண்மீன் மிக்கொளிர் மூக்கணி | போற்றி ஓம் | |
| ஓம் | கதம்பப் பூவொளிர் காதினள் | போற்றி ஓம் | 20 |
| ஓம் | கதிர்மதித் தோடுகள் அணிந்தாய் | போற்றி ஓம் | |
| ஓம் | பளிங்கொளி தருமிரு கதுப்பினள் | போற்றி ஓம் | |
| ஓம் | கோவைப் பவழத் திதழாய் | போற்றி ஓம் | |
| ஓம் | முத்தினை வெல்லும் பல்லினள் | போற்றி ஓம் | |
| ஓம் | கலைமகள் வீணையின் சொல்லினள் | போற்றி ஓம் | |
| ஓம் | முல்லையை வெல்லும் நகையினள் | போற்றி ஓம் | |
| ஓம் | ஈடில் மோவாய்ப் பொலிவினள் | போற்றி ஓம் | |
| ஓம் | பொன்னிழை தோள்வளை அணிந்தாய் | போற்றி ஓம் | |
| ஓம் | கறைகெழு பாசக் கையினள் | போற்றி ஓம் | |
| ஓம் | ஞானத் தோட்டிகொள் கரத்தினள் | போற்றி ஓம் | 30 |

ஓம் கரும்புவில் லேந்திய காரிகை போற்றி ஓம்
ஓம் உண்டிலை யெனச்சொல் இடையாய் போற்றி ஓம்
ஓம் செம்பட் டுடுத்த அரையினள் போற்றி ஓம்
ஓம் திரண்டுருள் கணைக்கால் கொண்டனை போற்றி ஓம்
ஓம் ஆமை முதுகெனும் புறவடி போற்றி ஓம்
ஓம் தொழுபவர் இருள்நீக் கொளிநகம் போற்றி ஓம்
ஓம் மணியரி கொண்ட சிலம்பினள் போற்றி ஓம்
ஓம் தூமென் அன்ன நடையினள் போற்றி ஓம்
ஓம் அழகுப் பெட்டகம் ஆயினை போற்றி ஓம்
ஓம் மாசிலா உருவுடை மாண்பினை போற்றி ஓம் 40

ஓம் தன்னுளே சிவத்தைத் தரித்தாய் போற்றி ஓம்
ஓம் தானே சிவமாய் ஆனாய் போற்றி ஓம்
ஓம் மேருவின் நடுவண் இருப்பாய் போற்றி ஓம்
ஓம் திருநகர் ஆளும் திருவே போற்றி ஓம்
ஓம் சிந்தா மணியில் உறைவாய் போற்றி ஓம்
ஓம் ஐவகைப் பரம்பொருள் இருக்கையள் போற்றி ஓம்
ஓம் கதம்ப வனத்தே களிப்பாய் போற்றி ஓம்
ஓம் அமிழ்தக் கடல்நடு அமைந்தாய் போற்றி ஓம்
ஓம் காமம் நிறைக்கும் கருணை போற்றி ஓம்
ஓம் காமம் அழிக்கும் காரிகை போற்றி ஓம் 50

ஓம் வேண்டுவ வேண்டியாங் களிப்பாய் போற்றி ஓம்
ஓம் விண்ணும் மண்ணும் தொழும்தாய் போற்றி ஓம்
ஓம் வைணவி துணையெனக் கொண்டாய் போற்றி ஓம்
ஓம் கனல்மிகு கோட்டையின் நடுவினள் போற்றி ஓம்
ஓம் மாலயன் தொழவருள் மங்காய் போற்றி ஓம்
ஓம் குண்டலி மறையினைக் காப்பாய் போற்றி ஓம்
ஓம் மறையுள மறைகளைக் காப்பாய் போற்றி ஓம்
ஓம் வழிபடும் மறைகளைக் காப்பாய் போற்றி ஓம்
ஓம் சக்கர ரகசியம் காப்பாய் போற்றி ஓம்
ஓம் மந்திர ரகசியம் காப்பாய் போற்றி ஓம் 60

ஓம் மூலாதாரத் துறைவாய் போற்றி ஓம்
ஓம் சுவாதிட்டானத் திருப்பாய் போற்றி ஓம்
ஓம் மணிபூரகத்தே ஆள்வாய் போற்றி ஓம்
ஓம் அநாக தத்தே ஆழ்ந்தாய் போற்றி ஓம்
ஓம் விசுத்தி தன்னில் இருப்பாய் போற்றி ஓம்
ஓம் ஆஞ்ஞை யிடத்தே அமர்வாய் போற்றி ஓம்
ஓம் ஆயிரம் இதழில் அமர்ந்தாய் போற்றி ஓம்

ஓம் சக்கரத் தாறில் இருப்பாய் போற்றி ஓம்
ஓம் அடியவர் வழிபா டுகந்தாய் போற்றி ஓம்
ஓம் பிறவிவேர் அழிக்கும் பெற்றியள் போற்றி ஓம் 70

ஓம் குண்டலி வடிவில் குலவினை போற்றி ஓம்
ஓம் மங்கலமெல்லாம் தருவாய் போற்றி ஓம்
ஓம் மங்கலம் தானே ஆயினை போற்றி ஓம்
ஓம் அடியவர் வளம்பெற அருள்வாய் போற்றி ஓம்
ஓம் அன்பெனும் வலையுட் படுவாய் போற்றி ஓம்
ஓம் அச்சம் தவிர்த்தே ஆள்வாய் போற்றி ஓம்
ஓம் பெருமையும் பொறையும் உடையாய் போற்றி ஓம்
ஓம் தனக்காதாரம் இல்லாய் போற்றி ஓம்
ஓம் தானாதாரம் ஆயினை போற்றி ஓம்
ஓம் பற்றிலர் பற்றும் பொருளே போற்றி ஓம் 80

ஓம் தானொரு பற்றும் அற்றாய் போற்றி ஓம்
ஓம் மாறுதல் இல்லா மாண்பினை போற்றி ஓம்
ஓம் முக்குணம் கடந்த முதலே போற்றி ஓம்
ஓம் கலங்கிய நெஞ்சில் காணாய் போற்றி ஓம்
ஓம் கலங்கா நெஞ்சில் களிப்பாய் போற்றி ஓம்
ஓம் தூய்மையும் அறிவும் துலக்குவை போற்றி ஓம்
ஓம் அன்பும் அறிவும் ஆனாய் போற்றி ஓம்
ஓம் தானே அனைத்தும் ஆள்வாய் போற்றி ஓம்
ஓம் தன்னை ஆள்வோர் இல்லாய் போற்றி ஓம்
ஓம் நானெனும் அகந்தை கொல்வாய் போற்றி ஓம் 90

ஓம் மதங்களுக்கெட்டா மாண்பினை போற்றி ஓம்
ஓம் மதியுள மயக்கம் மாய்ப்பாய் போற்றி ஓம்
ஓம் மதத்துள மயக்கமும் மாய்ப்பாய் போற்றி ஓம்
ஓம் பாவம் போக்கும் பரம்பொருள் போற்றி ஓம்
ஓம் ஐயம் போக்கும் ஐயை போற்றி ஓம்
ஓம் பிறவா யாக்கைப் பெரியோள் போற்றி ஓம்
ஓம் காரிய காரணம் விதித்தாய் போற்றி ஓம்
ஓம் காரியத் துண்ணிறை காரணம் போற்றி ஓம்
ஓம் உயிர்க்குலம் படர்தரு கொம்பே போற்றி ஓம்
ஓம் இரும்பெமை ஈர்க்கும் காந்தம் போற்றி ஓம் 100

ஓம் விருப்பும் வெறுப்பும் இல்லாய் போற்றி ஓம்
ஓம் பிறவிப் பிணிதீர் மருந்தே போற்றி ஓம்
ஓம் வேற்றுமை இல்லா விழுத்துணை போற்றி ஓம்

ஓம் வினைப்பயன் அழிக்கும் வேல்விழி போற்றி ஓம்
ஓம் தன்விதி மீறாத் தகையினள் போற்றி ஓம்
ஓம் கொற்றம் கொடுக்கும் கொற்றவை போற்றி ஓம்
ஓம் துக்கம் துடைக்கும் துணிபொருள் போற்றி ஓம்
ஓம் தீயோர்க் கெட்டாத் திண்பொருள் போற்றி ஓம்
ஓம் நல்லோர்க்கெட்டும் நன்பொருள் போற்றி ஓம்
ஓம் தீமையும் பாவமும் தொலைப்பாய் போற்றி ஓம் 110

ஓம் எல்லாம் அறிந்த ஏந்திழை போற்றி ஓம்
ஓம் கருணைக் கடலாய்ப் பரந்தனை போற்றி ஓம்
ஓம் ஒப்புயர்வற்ற ஒரு பொருள் போற்றி ஓம்
ஓம் அனைத்துள சக்தி ஆனாய் போற்றி ஓம்
ஓம் நற்கதி காட்டும் நாயகி போற்றி ஓம்
ஓம் சிற்றறி வோர்க்குத் தெரியாய் போற்றி ஓம்
ஓம் பேரறிவாளர்க் கிலங்குவை போற்றி ஓம்
ஓம் எல்லா வடிவும் எடுப்பாய் போற்றி ஓம்
ஓம் எல்லா மந்திரத்துட் பொருள் போற்றி ஓம்
ஓம் எல்லாத் தந்திரத் துருவினை போற்றி ஓம் 120

ஓம் ஐயன் சிவனைப் படைத்தாய் போற்றி ஓம்
ஓம் அச்சிவன் தனக்கும் தாய்நீ போற்றி ஓம்
ஓம் மாமுனிவோர் தொழும் மாண்பினை போற்றி ஓம்
ஓம் மாயம் விளைக்கும் வடிவினள் போற்றி ஓம்
ஓம் சத்துவ குணமே கொண்டாய் போற்றி ஓம்
ஓம் போகமும் யோகமும் கொண்டாய் போற்றி ஓம்
ஓம் வீரமும் வலிமையும் கொண்டாய் போற்றி ஓம்
ஓம் வேண்டிய வெற்றி தருவாய் போற்றி ஓம்
ஓம் பெரும் பேரறிவாய்த் திகழ்வாய் போற்றி ஓம்
ஓம் சித்திகள் எட்டும் தருவாய் போற்றி ஓம் 130

ஓம் யோகியர் தொழுகைக் குரியாய் போற்றி ஓம்
ஓம் மந்திர மொழிபல கொண்டாய் போற்றி ஓம்
ஓம் தந்திர நூல்பல தரித்தாய் போற்றி ஓம்
ஓம் எந்திரம் பலவுள் ளிருப்பாய் போற்றி ஓம்
ஓம் வேள்வியின் வழிபட உரியாய் போற்றி ஓம்
ஓம் வயிரவர் ஏத்தும் வயிரவி போற்றி ஓம்
ஓம் சந்திரன் தொழத்தகும் சால்பினை போற்றி ஓம்
ஓம் சந்திர மண்டலத்துள்ளாய் போற்றி ஓம்
ஓம் எழில்மதிக் கலையைத் தரித்தாய் போற்றி ஓம்
ஓம் அகிலாண்டத்தின் தலைவி போற்றி ஓம் 140

| | | | |
|---|---|---|---|
| ஓம் | சீர்சக்கரத்தே இருப்பாய் | போற்றி ஓம் | |
| ஓம் | சீர்வித்தை வடிவானாய் | போற்றி ஓம் | |
| ஓம் | பிரமம் எனுமோர் பரம்பொருள் | போற்றி ஓம் | |
| ஓம் | பதுமராகத் தொளியாய் | போற்றி ஓம் | |
| ஓம் | நினைவின் நிலையில் இருப்பாய் | போற்றி ஓம் | |
| ஓம் | கனவின் நிலையில் காட்டுவை | போற்றி ஓம் | |
| ஓம் | சுழுத்தி நிலையில் சுடர்வாய் | போற்றி ஓம் | |
| ஓம் | துரிய நிலையில் துலங்குவை | போற்றி ஓம் | |
| ஓம் | அந்நிலை நான்கும் கடப்பாய் | போற்றி ஓம் | |
| ஓம் | படைத்தல் தொழிலைப் புரிவாய் | போற்றி ஓம் | 150 |
| ஓம் | படைப்போன் வடிவில் உள்ளாய் | போற்றி ஓம் | |
| ஓம் | காத்தல் தொழிலைச் செய்வாய் | போற்றி ஓம் | |
| ஓம் | காப்போன் தன்னுருக் கொண்டாய் | போற்றி ஓம் | |
| ஓம் | அழித்தும் துடைத்தும் அருள்வாய் | போற்றி ஓம் | |
| ஓம் | அழிக்கும் உருத்திரன் உருவினை | போற்றி ஓம் | |
| ஓம் | மறைக்கும் மாயை புரிவாய் | போற்றி ஓம் | |
| ஓம் | மறைக்கும் ஈசன் வடிவினள் | போற்றி ஓம் | |
| ஓம் | கருணை பொழிந்தே அருள்வாய் | போற்றி ஓம் | |
| ஓம் | சதாசிவன் உருவில் இருப்பாய் | போற்றி ஓம் | |
| ஓம் | கதிர்மண்டல நடு இருப்பாய் | போற்றி ஓம் | 160 |
| ஓம் | காயத்திரி வடிவாயினள் | போற்றி ஓம் | |
| ஓம் | இமைப்பில் புவனம் ஆக்குவை | போற்றி ஓம் | |
| ஓம் | இமைப்பில் புவனம் அழிப்பாய் | போற்றி ஓம் | |
| ஓம் | ஆயிரந் தலைமுகம் உடையாய் | போற்றி ஓம் | |
| ஓம் | புல் முதல் அயன்வரைப் படைப்பாய் | போற்றி ஓம் | |
| ஓம் | குலமும் குடியும் வகுத்தாய் | போற்றி ஓம் | |
| ஓம் | மறையெனும் ஆணைகள் வகுத்தாய் | போற்றி ஓம் | |
| ஓம் | இருவினைப் பயனை ஈவாய் | போற்றி ஓம் | |
| ஓம் | மறையெனும் சிப்பியின் முத்தே | போற்றி ஓம் | |
| ஓம் | அறம்பொருள் இன்பம் வீடளிப்பவள் | போற்றி ஓம் | 170 |
| ஓம் | முழுமுதல் பொருளாய் இலங்குவை | போற்றி ஓம் | |
| ஓம் | ஆதியும் அந்தமும் இல்லாய் | போற்றி ஓம் | |
| ஓம் | இன்பம் அனைத்தும் துய்ப்பாய் | போற்றி ஓம் | |
| ஓம் | நாத வடிவினில் நிற்பாய் | போற்றி ஓம் | |
| ஓம் | விந்து வடிவினில் விளங்கினை | போற்றி ஓம் | |
| ஓம் | கலைமுதல் வடிவில் கனிந்தனை | போற்றி ஓம் | |
| ஓம் | எல்லார் இதயத்துள்ளாய் | போற்றி ஓம் | |

ஓம் கொள்வன தள்வன இல்லாய் போற்றி ஓம்
ஓம் பேரரசரும் தொழும் பிராட்டி போற்றி ஓம்
ஓம் சிவனைச் சிவப்பால் சிவப்பவள் போற்றி ஓம் 180

ஓம் திங்கள் முகத்துத் திருவே போற்றி ஓம்
ஓம் இரதியை அழகால் வென்றாய் போற்றி ஓம்
ஓம் அரக்கர் குலத்தை அழித்தாய் போற்றி ஓம்
ஓம் தத்துவம் கடந்த தாயே போற்றி ஓம்
ஓம் மறைகளுக் கப்பால் விளங்குவை போற்றி ஓம்
ஓம் விந்திய மலையினும் உறைவாய் போற்றி ஓம்
ஓம் குறைதலும் வளர்தலும் இல்லாய் போற்றி ஓம்
ஓம் கன்றுகாண் ஆவின் வருவாய் போற்றி ஓம்
ஓம் மெய்யுள தீயில் இருப்பாய் போற்றி ஓம்
ஓம் கசிந்தழு வோர்க்குக் கற்பகம் போற்றி ஓம் 190

ஓம் மெய்யுணர்வாக இருப்பாய் போற்றி ஓம்
ஓம் 'நீயது' என்பதை உணர்த்துக போற்றி ஓம்
ஓம் முற்றிய ஞான வடிவினள் போற்றி ஓம்
ஓம் பரையெனப் போற்றும் பரம்பொருள் போற்றி ஓம்
ஓம் வைகரி வாக்கின் வடிவினள் போற்றி ஓம்
ஓம் அடியார் மனத்துறை அன்னம் போற்றி ஓம்
ஓம் மாதங்கி யெனும் மரகதம் போற்றி ஓம்
ஓம் வீணையும் கிளியும் ஏந்தினை போற்றி ஓம்
ஓம் தாரக மந்திரத் தாரை போற்றி ஓம்
ஓம் கொடுமை அழிக்கும் காளி போற்றி ஓம் 200

ஓம் வேண்டத் தக்கது அறிவாய் போற்றி ஓம்
ஓம் வேண்டும் பொருளைத் தருவாய் போற்றி ஓம்
ஓம் தானே சான்றாய் நின்றாய் போற்றி ஓம்
ஓம் தனக்கென ஒருசான்றில்லாய் போற்றி ஓம்
ஓம் ஈரம் நிறைந்த நெஞ்சினை போற்றி ஓம்
ஓம் ஈரெண் தேவியர்க் கிறைவீ போற்றி ஓம்
ஓம் அங்கிங் கெனாத வாறிருப்பாய் போற்றி ஓம்
ஓம் எங்கும் நிறைந்தவள் நீயே போற்றி ஓம்
ஓம் அக்கரம் போல் முதல் ஆனாய் போற்றி ஓம்
ஓம் சக்கர நடுபிந் தானாய் போற்றி ஓம் 210

ஓம் தனக்கென உவமை இல்லாய் போற்றி ஓம்
ஓம் எனதெனும் அகந்தை மாய்ப்பாய் போற்றி ஓம்
ஓம் உரைமனம் கடந்த உயர்பொருள் போற்றி ஓம்

ஓம் பரையென நின்ற பரம்பொருள் போற்றி ஓம்
ஓம் என்றும் இளமை உடையாய் போற்றி ஓம்
ஓம் அன்பர் மனக்குகை வதிவாய் போற்றி ஓம்
ஓம் தத்துவ இருக்கை கொண்டனை போற்றி ஓம்
ஓம் பித்தம் தெளிக்கும் மருந்தே போற்றி ஓம்
ஓம் தடைகளைத் தகர்க்கும் தலைவீ போற்றி ஓம்
ஓம் கொடையுளங் கொண்டெமைக்காப்பாய் போற்றி ஓம் 220

ஓம் பேரரசும் தரும் பெற்றியள் போற்றி ஓம்
ஓம் சீர்கலை வடிவின் சிறந்தனை போற்றி ஓம்
ஓம் மெய்ஞ்ஞானத்தால் விளங்குவை போற்றி ஓம்
ஓம் அஞ்ஞானத்தால் விளங்காய் போற்றி ஓம்
ஓம் தானே அனைத்தும் அறிவாய் போற்றி ஓம்
ஓம் தான் அறிதற் கொன்றில்லாய் போற்றி ஓம்
ஓம் யோக வடிவாய் இருப்பாய் போற்றி ஓம்
ஓம் யோகத்தாலடை பெற்றியள் போற்றி ஓம்
ஓம் ஆதி சக்தியாய் ஆனாய் போற்றி ஓம்
ஓம் இச்சா சக்தியாய் இயன்றாய் போற்றி ஓம் 230

ஓம் கிரியா சக்தியாய்க் கிளர்ந்தாய் போற்றி ஓம்
ஓம் ஞான சக்தியாய் ஆனாய் போற்றி ஓம்
ஓம் அனைத்தா தாரம் ஆனாய் போற்றி ஓம்
ஓம் தனக்கா தாரம் இல்லாய் போற்றி ஓம்
ஓம் தானே தனித்தே ஆள்வாய் போற்றி ஓம்
ஓம் தன்னை ஆள்வதற்கில்லாய் போற்றி ஓம்
ஓம் உண்ணும் சோற்றினும் இனியாய் போற்றி ஓம்
ஓம் பருகும் நீரினும் சுவையாய் போற்றி ஓம்
ஓம் பெரிய நாயகிப் பெரியாய் போற்றி ஓம்
ஓம் புவனம் முழுவதும் உடையாய் போற்றி ஓம் 240

ஓம் அகிலமும் அண்டமும் ஆள்வாய் போற்றி ஓம்
ஓம் முகில்தரு மழையென அருள்வாய் போற்றி ஓம்
ஓம் அனைத்துள மாசுகள் அகற்றுவை போற்றி ஓம்
ஓம் புறத்துள மாசுகள் பொசுக்குவை போற்றி ஓம்
ஓம் பிரமானந்த வடிவே போற்றி ஓம்
ஓம் பிரமானந்தப் பழங்கடல் போற்றி ஓம்
ஓம் சச்சிதானந்த உருவே போற்றி ஓம்
ஓம் மொழிக்குலமெல்லாம் படைத்தாய் போற்றி ஓம்
ஓம் விழிதிறந்தறிவினை விளக்காய் போற்றி ஓம்
ஓம் அன்பர்க் கரசும் ஈவாய் போற்றி ஓம் 250

ஓம் துன்பொழித் தருளைப் பொழிவாய் போற்றி ஓம்
ஓம் அசுரர் குலமெலாம் அழிப்பாய் போற்றி ஓம்
ஓம் அமரர் குலமெலாம் காப்பாய் போற்றி ஓம்
ஓம் குருவாய் வந்தருள் தருவாய் போற்றி ஓம்
ஓம் உருவாய் எம்முன் வருவாய் போற்றி ஓம்
ஓம் 'நான் யார்?' என்பதை உணர்த்துவை போற்றி ஓம்
ஓம் சாவித்திரியென ஆனாய் போற்றி ஓம்
ஓம் காயத்திரி வடிவானாய் போற்றி ஓம்
ஓம் முக்குணம் உயிர்கட்கீந்தாய் போற்றி ஓம்
ஓம் முக்குணம் கடந்த முதல்வீ போற்றி ஓம் 260

ஓம் முன்னைப் பழம்பொருள் ஆயினை போற்றி ஓம்
ஓம் பின்னைப் புதுமையின் புதியாள் போற்றி ஓம்
ஓம் அடியார் நோன்புக் கிரங்குவை போற்றி ஓம்
ஓம் மிடியும் பகையும் மாய்ப்பாய் போற்றி ஓம்
ஓம் ஏடலர் சண்பகம் உகந்தாய் போற்றி ஓம்
ஓம் பாடலப் பூவை உகந்தாய் போற்றி ஓம்
ஓம் மந்தாரத்தை மகிழ்வாய் போற்றி ஓம்
ஓம் மருவாய் மலராய் இருப்பாய் போற்றி ஓம்
ஓம் உருவாய் அருவாய் இருப்பாய் போற்றி ஓம்
ஓம் உளதாய் இலதாய் இருப்பாய் போற்றி ஓம் 270

ஓம் கதியாய் நிதியாய் இருப்பாய் போற்றி ஓம்
ஓம் தனக்கெனத் தளையொன்றில்லாய் போற்றி ஓம்
ஓம் தானே எம்தளை தகர்ப்பாய் போற்றி ஓம்
ஓம் பல்கலை மாலை தொடுத்தாய் போற்றி ஓம்
ஓம் சொல்மலர் மாலை உகப்பாய் போற்றி ஓம்
ஓம் காவியச் சுவையில் கிளர்வாய் போற்றி ஓம்
ஓம் ஓவியக் கலையுள் ஒளிர்வாய் போற்றி ஓம்
ஓம் கலைமகள் தனக்கும் தாயே போற்றி ஓம்
ஓம் அலைமகள் தனக்கும் அன்னாய் போற்றி ஓம்
ஓம் மலைமகள் தனக்கும் தாய்நீ போற்றி ஓம் 280

ஓம் சக்திகள் பலவும் படைத்தாய் போற்றி ஓம்
ஓம் சத்தாய் நின்றவர் ஆள்வாய் போற்றி ஓம்
ஓம் பக்திக் குருகும் பாவாய் போற்றி ஓம்
ஓம் நாவும் சுவையும் ஆனாய் போற்றி ஓம்
ஓம் நாசியும் மணமும் ஆனாய் போற்றி ஓம்
ஓம் செவியும் ஒலியும் ஆனாய் போற்றி ஓம்
ஓம் உடலும் உணர்வும் ஆனாய் போற்றி ஓம்

ஓம் எண்ணும் எழுத்தும் ஆனாய் போற்றி ஓம்
ஓம் மண்ணும் விண்ணும் ஆள்வாய் போற்றி ஓம்
ஓம் சொல்லும் பொருளும் ஆனாய் போற்றி ஓம் 290

ஓம் அண்டமும் பிண்டமும் அமைத்தாய் போற்றி ஓம்
ஓம் பிண்டத் தண்டம் பிறக்கினை போற்றி ஓம்
ஓம் அண்டகோடிகள் படைத்தாய் போற்றி ஓம்
ஓம் அருள்வெளிதனில் அவை இயக்குவை போற்றி ஓம்
ஓம் கோள்கள் ஒன்பதின் தலைவீ போற்றி ஓம்
ஓம் ஆகம முடிநின்றோங்கினை போற்றி ஓம்
ஓம் ஆரண முடிமேல் ஓங்கினை போற்றி ஓம்
ஓம் இகநிலைப் பொருளாய் இலங்கினை போற்றி ஓம்
ஓம் பரநிலைப் பொருளாய்ப் பொருந்தினை போற்றி ஓம்
ஓம் இகபரம் கடந்த ஒரு பொருள் போற்றி ஓம் 300

ஓம் திக்குகள் பத்தாய்த் திகழ்வாய் போற்றி ஓம்
ஓம் ஒளிமணி ஒன்பதில் ஒளிர்வாய் போற்றி ஓம்
ஓம் திருமகள் உருவெட்டானாய் போற்றி ஓம்
ஓம் உருகும் பண்ணே ழானாய் போற்றி ஓம்
ஓம் சுவைகளில் ஆறாய்ச் சேர்ந்தாய் போற்றி ஓம்
ஓம் பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி ஓம்
ஓம் நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி ஓம்
ஓம் தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி ஓம்
ஓம் வளியிடை இரண்டாய் வயங்கினை போற்றி ஓம்
ஓம் வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி ஓம் 310

ஓம் ஒன்றாய் நின்ற ஒரு பொருள் போற்றி ஓம்
ஓம் பரத்தில் பார்முதல் மறைத்தாய் போற்றி ஓம்
ஓம் பார்முதல் பரமாய் மறைந்தாய் போற்றி ஓம்
ஓம் மாயை விளைத்தே மறைத்தாய் போற்றி ஓம்
ஓம் மறைத்த மாயை தெளிப்பாய் போற்றி ஓம்
ஓம் மண்ணினில் பொன்மை வகுத்தாய் போற்றி ஓம்
ஓம் மண்ணினில் பல்கரு இயற்றினை போற்றி ஓம்
ஓம் மண்ணில் ஐந்தியல் வகுத்தனை போற்றி ஓம்
ஓம் மண்ணில் பல்பயன் வகுத்தாய் போற்றி ஓம்
ஓம் மண்ணியல் சக்திகள் வகுத்தாய் போற்றி ஓம் 320

ஓம் மண்செயல் சக்திகள் வகுத்தாய் போற்றி ஓம்
ஓம் மண்கரு உயிர்த்தொகை அமைத்தாய் போற்றி ஓம்
ஓம் மண்ணுரு நிலைபல வகுத்தாய் போற்றி ஓம்

ஓம் நீரில் பசுமையை நிறுத்தினை போற்றி ஓம்
ஓம் நீரில் கருநிலை நிறுத்தினை போற்றி ஓம்
ஓம் நீரில் சுவைநிலை நிறைத்தனை போற்றி ஓம்
ஓம் நீரிடைக் குணவியல் நிகழ்த்தினை போற்றி ஓம்
ஓம் நீரிடை உயிர்பல நிறுவினை போற்றி ஓம்
ஓம் நீரிடைப் பொருள்பல நிகழ்த்தினை போற்றி ஓம்
ஓம் நீரியல் பலப்பல நிறைத்தனை போற்றி ஓம் 330

ஓம் தீயினில் இயல்பல வகுத்தாய் போற்றி ஓம்
ஓம் தீயிடை அருநிலை வகுத்தாய் போற்றி ஓம்
ஓம் தீயிடைத் திருநிலை அமைத்தாய் போற்றி ஓம்
ஓம் தீயிடைக் கருநிலை அமைத்தாய் போற்றி ஓம்
ஓம் தீயிடைச் சக்திகள் வகுத்தாய் போற்றி ஓம்
ஓம் தீயிடைப் பெருந்திறல் அமைத்தாய் போற்றி ஓம்
ஓம் தீயிடைப் பயன்பல அமைத்தாய் போற்றி ஓம்
ஓம் தீயியல் பலப்பல செறித்தாய் போற்றி ஓம்
ஓம் காற்றிடை அசையியல் அமைத்தாய் போற்றி ஓம்
ஓம் காற்றிடை கலையியல் அமைத்தாய் போற்றி ஓம் 340

ஓம் காற்றிடை உயிரியல் அமைத்தாய் போற்றி ஓம்
ஓம் காற்றிடைத் திறம்பல அமைத்தாய் போற்றி ஓம்
ஓம் காற்றினில் ஊறியல் அமைத்தாய் போற்றி ஓம்
ஓம் காற்றினில் குணம்பல அமைத்தாய் போற்றி ஓம்
ஓம் காற்றிடைச் சக்திகள் அமைத்தாய் போற்றி ஓம்
ஓம் காற்றினால் பல்பயன் அமைத்தாய் போற்றி ஓம்
ஓம் வெளியினில் ஒலிநிலை வகுத்தாய் போற்றி ஓம்
ஓம் வெளியினில் வியனிலை அமைத்தாய் போற்றி ஓம்
ஓம் வெளியிடை அருநிலை அமைத்தாய் போற்றி ஓம்
ஓம் வெளியிடைக் கருநிலை வகுத்தாய் போற்றி ஓம் 350

ஓம் வெளியிடைச் சக்திகள் வகுத்தாய் போற்றி ஓம்
ஓம் வெளியிடை அனைத்தும் விரித்தாய் போற்றி ஓம்
ஓம் வானிடைக் காற்றை வகுத்தாய் போற்றி ஓம்
ஓம் காற்றிடை நெருப்பை வகுத்தாய் போற்றி ஓம்
ஓம் நெருப்பிடை நீரை வகுத்தாய் போற்றி ஓம்
ஓம் நீரிடை நிலத்தை நிறுத்தினை போற்றி ஓம்
ஓம் புனல்மேல் புவியைப் படைத்தாய் போற்றி ஓம்
ஓம் அனல்மேல் அவையிரண்டாக்கினை போற்றி ஓம்
ஓம் வானில் ஐம்பூதம் வகுத்தாய் போற்றி ஓம்
ஓம் உயர்வெளி அயவெளி வகுத்தாய் போற்றி ஓம் 360

ஓம் கலைவெளி நல்வெளி வகுத்தாய் போற்றி ஓம்
ஓம் பரவெளி தன்னைப் படைத்தாய் போற்றி ஓம்
ஓம் பரம்பர வெளியைப் படைத்தாய் போற்றி ஓம்
ஓம் பராபர வெளியைப் படைத்தாய் போற்றி ஓம்
ஓம் பெருவெளி தன்னைப் படைத்தாய் போற்றி ஓம்
ஓம் சுகவெளி தானும் படைத்தாய் போற்றி ஓம்
ஓம் குணமுதல் கருவிகள் கொடுத்தாய் போற்றி ஓம்
ஓம் மனமுதல் கருவிகள் வகுத்தாய் போற்றி ஓம்
ஓம் காலம் முதலிய வகுத்தாய் போற்றி ஓம்
ஓம் துரிசறு கருவிகள் வகுத்தாய் போற்றி ஓம் 370

ஓம் உயர்பல்லண்டம் வகுத்தாய் போற்றி ஓம்
ஓம் முச்சுடர் ஒளிதர வகுத்தாய் போற்றி ஓம்
ஓம் படைத்தல் தலைவரைப் படைத்தாய் போற்றி ஓம்
ஓம் காத்தல் தலைவரைக் காப்பாய் போற்றி ஓம்
ஓம் அழித்தல் தலைவரை அழிப்பாய் போற்றி ஓம்
ஓம் மறைத்திடு தலைவரை வகுத்தாய் போற்றி ஓம்
ஓம் தெளிவுசெய் தலைவரை வகுத்தாய் போற்றி ஓம்
ஓம் அவ்வவர்க் கண்டம் அமைத்தாய் போற்றி ஓம்
ஓம் விந்துவாம் சக்தியை வகுத்தாய் போற்றி ஓம்
ஓம் விந்தின் அண்டங்களை வகுத்தாய் போற்றி ஓம் 380

ஓம் ஓங்கார சக்திகள் அமைத்தாய் போற்றி ஓம்
ஓம் நாதமும் பிரமமும் வகுத்தாய் போற்றி ஓம்
ஓம் நாத அண்டங்களை வகுத்தாய் போற்றி ஓம்
ஓம் சத்திகள் சத்தர்கள் படைத்தாய் போற்றி ஓம்
ஓம் உயர்வகை அண்டம் படைத்தாய் போற்றி ஓம்
ஓம் உலப்பில அண்டம் வகுத்தாய் போற்றி ஓம்
ஓம் கடல்களும் மலைகளும் வகுத்தாய் போற்றி ஓம்
ஓம் கதிகளும் நதிகளும் வகுத்தாய் போற்றி ஓம்
ஓம் கடலிடைப் பல்வளம் வகுத்தாய் போற்றி ஓம்
ஓம் மலையிடைப் பல்வளம் வகுத்தாய் போற்றி ஓம் 390

ஓம் வித்தினில் விளைவியல் அடக்கினை போற்றி ஓம்
ஓம் வித்தினில் முளைப்பதம் வைத்தாய் போற்றி ஓம்
ஓம் வித்தினில் முளையை அமைத்தாய் போற்றி ஓம்
ஓம் முளையிடை விளைவை அமைத்தாய் போற்றி ஓம்
ஓம் வித்தினுள் வித்தை வகுத்தாய் போற்றி ஓம்
ஓம் அனைத்திலும் மூலம் நீயே போற்றி ஓம்
ஓம் தானொரு தானாய் விளங்குவை போற்றி ஓம்

ஓம் தானே தானாய் விளங்குவை போற்றி ஓம்
ஓம் ஊனுயிர் விளங்கும் ஒரு பொருள் போற்றி ஓம்
ஓம் விடய மறைப்பெலாம் தெருட்டுவை போற்றி ஓம் 400

ஓம் முட்டையில் பல்லுயிர் தோற்றினை போற்றி ஓம்
ஓம் வியர்வையில் பல்லுயிர் படைத்தனை போற்றி ஓம்
ஓம் வித்தினில் பல்லுயிர் படைப்பாய் போற்றி ஓம்
ஓம் கருவினில் பல்லுயிர் படைப்பாய் போற்றி ஓம்
ஓம் எழுவகைப் பிறவிகள் வகுத்தாய் போற்றி ஓம்
ஓம் வியப்புடை உயிர்த்திரள் படைப்பாய் போற்றி ஓம்
ஓம் பெண்ணினுள் ஆண்மையை அமைத்தாய் போற்றி ஓம்
ஓம் ஆணினுள் பெண்மையை அமைத்தாய் போற்றி ஓம்
ஓம் தாய்க்கரு உறையுயிர் காப்பாய் போற்றி ஓம்
ஓம் உடலுறு பிணிகளின் காப்பாய் போற்றி ஓம் 410

ஓம் உயிருறு உடலையும் காப்பாய் போற்றி ஓம்
ஓம் உடலுறு உயிரையும் காப்பாய் போற்றி ஓம்
ஓம் அவத்தைகள் படுமுயிர் காப்பாய் போற்றி ஓம்
ஓம் முச்சுடர் ஒளியால் காப்பாய் போற்றி ஓம்
ஓம் வான்முகில் தந்துயிர் காப்பாய் போற்றி ஓம்
ஓம் காலமும் நியதியும் காட்டுவை போற்றி ஓம்
ஓம் விச்சையும் இச்சையும் விளைப்பாய் போற்றி ஓம்
ஓம் போகமும் களிப்பும் பொருத்துவை போற்றி ஓம்
ஓம் துன்பழித் தின்சுகம் சேர்ப்பாய் போற்றி ஓம்
ஓம் திரைகளுள் தத்துவம் மறைப்பாய் போற்றி ஓம் 420

ஓம் மோனத்தே யொளி காட்டுவை போற்றி ஓம்
ஓம் ஞானத்தே சுவை கூட்டுவை போற்றி ஓம்
ஓம் ஊழிதோ றூழியும் உலவாய் போற்றி ஓம்
ஓம் வாழியென் றெமக்கே வாய்த்தாய் போற்றி ஓம்
ஓம் இருநிதி எழுநிதி ஈவாய் போற்றி ஓம்
ஓம் நவநிதி தருமொரு பெருநிதி போற்றி ஓம்
ஓம் அற்புதம் விளைக்கும் அருள்நிதி போற்றி ஓம்
ஓம் கற்பனை கடந்த கருணையே போற்றி ஓம்
ஓம் நற்குண நிதியாய் நின்றாய் போற்றி ஓம்
ஓம் சற்குண நிதியாய் நின்றாய் போற்றி ஓம் 430

ஓம் நிற்குண நிதியாய் நிலவினை போற்றி ஓம்
ஓம் சிற்குண நிதியெனும் சீரே போற்றி ஓம்
ஓம் திரைநுரை யில்லா அருட்கடல் போற்றி ஓம்
ஓம் நரைதிரை நீக்கும் மருந்தே போற்றி ஓம்
ஓம் தீஞ்சுவை நீர்மிகு பூந்தடம் போற்றி ஓம்
ஓம் மாந்தளிர் மெல்லடி மானே போற்றி ஓம்

ஓம் கோடையைத் தணிக்கும் குளிர்தரு போற்றி ஓம்
ஓம் மேடையில் வீசு மென்காற்றே போற்றி ஓம்
ஓம் களைப்பறக் கிடைத்த கருணைநீர் போற்றி ஓம்
ஓம் இளைப்பறக் கிடைத்த உணவே போற்றி ஓம் 440

ஓம் நீர்நசை போக்கும் நெல்லியள் போற்றி ஓம்
ஓம் வேர்விளை பலவின் சுளையே போற்றி ஓம்
ஓம் புனிதவான் தருவிளை கனியே போற்றி ஓம்
ஓம் கனியெலாம் கலந்த தீஞ்சுவையே போற்றி ஓம்
ஓம் தேற்றிய வேத முடிவினை போற்றி ஓம்
ஓம் ஏற்றிய ஞான விளக்கே போற்றி ஓம்
ஓம் ஆகம முடிமேல் அருள்ஒளி போற்றி ஓம்
ஓம் வேகங் கெடுத்தே ஆள்வாய் போற்றி ஓம்
ஓம் உலகெலாம் விளக்கும் செஞ்சுடர் போற்றி ஓம்
ஓம் அலகிலாத் தலைவரை ஆள்வாய் போற்றி ஓம் 450

ஓம் ஆதியும் அந்தமும் கடந்தாய் போற்றி ஓம்
ஓம் சோதியைச் சூழ்ந்த சுடரே போற்றி ஓம்
ஓம் உள்ளொளி விளக்கும் அருட்கனல் போற்றி ஓம்
ஓம் உயிரொளி விளக்கும் மெய்க்கனல் போற்றி ஓம்
ஓம் சத்தியல் அனைத்தும் தெரிப்பாய் போற்றி ஓம்
ஓம் சித்தியல் முழுதும் தெரிப்பாய் போற்றி ஓம்
ஓம் செற்றமும் தீமையும் தீர்ப்பாய் போற்றி ஓம்
ஓம் குற்றமும் குணமாய்க் கொள்வாய் போற்றி ஓம்
ஓம் அரியதில் அரிய அரியோய் போற்றி ஓம்
ஓம் எளியதில் எளிய எளியோய் போற்றி ஓம் 460

ஓம் மருவியெப்பொருளும் வளர்ப்பாய் போற்றி ஓம்
ஓம் நூலால் உணரா நுண்ணியை போற்றி ஓம்
ஓம் மேலொடு கீழாய் விரிந்தாய் போற்றி ஓம்
ஓம் அந்தமும் ஆதியும் அற்றாய் போற்றி ஓம்
ஓம் பந்தமும் வீடும் படைப்பாய் போற்றி ஓம்
ஓம் சொற்பதம் கடந்த தொல்லோய் போற்றி ஓம்
ஓம் கற்றவர் உண்ணும் கனியே போற்றி ஓம்
ஓம் வானோர்க் கரிய மருந்தே போற்றி ஓம்
ஓம் ஏனோர்க் கெளிய இறைவீ போற்றி ஓம்
ஓம் உரையுணர்விறந்த ஒருத்தி போற்றி ஓம் 470

ஓம் விரிகடல் உலகின் விளைவே போற்றி ஓம்
ஓம் அருமையில் எளிய அழகே போற்றி ஓம்
ஓம் கருமுகிலாகிய கண்ணே போற்றி ஓம்
ஓம் அழிவிலா இன்பக் கடலே போற்றி ஓம்

ஓம் தொழுதகை துன்பம் துடைப்பாய் போற்றி ஓம்
ஓம் அழிவதும் ஆவதும் கடந்தாய் போற்றி ஓம்
ஓம் முழுவதுங் கடந்த முதல்வீ போற்றி ஓம்
ஓம் வானகத் தமரர் தாயே போற்றி ஓம்
ஓம் கூனல் இளம்பிறை நுதலாய் போற்றி ஓம்
ஓம் தஞ்சம் என்றே தொழுதோம் போற்றி ஓம் 480

ஓம் அஞ்சல் என்றே அருள்வாய் போற்றி ஓம்
ஓம் மீளா அடியோம் நினக்கே போற்றி ஓம்
ஓம் ஆளாய்க் கொண்டெமை ஆள்வாய் போற்றி ஓம்
ஓம் துரியமும் கடந்த சுடரே போற்றி ஓம்
ஓம் தெரிவரிதாகிய தெளிவே போற்றி ஓம்
ஓம் ஆரா அமுதே அருளே போற்றி ஓம்
ஓம் பேராயிரமுடைப் பிராட்டி போற்றி ஓம்
ஓம் சிந்தனைக் கரிய சக்தி போற்றி ஓம்
ஓம் எந்தமை உய்யக் கொள்வாய் போற்றி ஓம்
ஓம் ஒழிவற நிறைந்த ஒருத்தி போற்றி ஓம் 490

ஓம் செழுமலர் மருவூர்த் தாயே போற்றி ஓம்
ஓம் தொழுவார் மையல் துணிப்பாய் போற்றி ஓம்
ஓம் பிழைப்பும் வாய்ப்பும் அளிப்பாய் போற்றி ஓம்
ஓம் துதிப்போர் நெஞ்சில் துலங்குவை போற்றி ஓம்
ஓம் அரம்பையர் துதிக்கும் வடிவினை போற்றி ஓம்
ஓம் அரம்பையர் கணம்தொழும் அழகே போற்றி ஓம்
ஓம் வரம்பல தந்தெமைக் காப்பாய் போற்றி ஓம்
ஓம் எள்ளுறு நெய்போல் இலங்குவை போற்றி ஓம்
ஓம் உள்ளுறு ஆன்மா உறைவாய் போற்றி ஓம்
ஓம் ஆன்ம விளக்கம் தருவாய் போற்றி ஓம் 500

ஓம் சீர்சக்கரத் துறை சீரே போற்றி ஓம்
ஓம் சீரும் சிறப்பும் அளிப்பாய் போற்றி ஓம்
ஓம் நவகோணத்துறை நாயகி போற்றி ஓம்
ஓம் அவத்தைகள் யாவும் அகற்றுவை போற்றி ஓம்
ஓம் வெறுப்பன செய்தால் மறப்பாய் போற்றி ஓம்
ஓம் மறுப்பன செய்யினும் வாழ்த்துவம் போற்றி ஓம்
ஓம் ஆரா இன்பத் தமுதே போற்றி ஓம்
ஓம் சீரார் மருவூர்ப் பூத்தாய் போற்றி ஓம்
ஓம் தேனார் அமுதே தேவீ போற்றி ஓம்
ஓம் ஊனை உருக்கும் உயர்வே போற்றி ஓம் 510

ஓம் ஓரார் உள்ளத் தொளிப்பாய் போற்றி ஓம்

ஓம் ஈர்த்தெமை ஆண்ட என்தாய் போற்றி ஓம்
ஓம் நோக்கிற்கரிய நோக்கே போற்றி ஓம்
ஓம் நுணுக்கற்கரிய நுண்ணியள் போற்றி ஓம்
ஓம் கள்ளப்புலன் கட்டழிப்பாய் போற்றி ஓம்
ஓம் நள்ளிருள் நட்டம் பயின்றாய் போற்றி ஓம்
ஓம் அருக்கனில் சோதி அமைத்தாய் போற்றி ஓம்
ஓம் மதியினில் தண்மை வைத்தாய் போற்றி ஓம்
ஓம் தீயினில் வெம்மை சேர்த்தாய் போற்றி ஓம்
ஓம் வானில் கலப்பை வைத்தாய் போற்றி ஓம் 520

ஓம் காலின் ஊக்கம் கண்டாய் போற்றி ஓம்
ஓம் நீரினில் இன்சுவை நிகழ்த்தினை போற்றி ஓம்
ஓம் மண்ணினில் திண்மை வைத்தாய் போற்றி ஓம்
ஓம் பெண்மையில் மென்மை சேர்த்தாய் போற்றி ஓம்
ஓம் ஆண்மையில் ஆற்றல் சேர்த்தாய் போற்றி ஓம்
ஓம் தாய்மையில் இறைமை காட்டுவை போற்றி ஓம்
ஓம் இறைமையில் தாய்மை விளக்குவை போற்றி ஓம்
ஓம் விலங்கிலும் தாய்மை விளக்குவை போற்றி ஓம்
ஓம் மலரினில் மணத்தை வைத்தாய் போற்றி ஓம்
ஓம் மலரினில் தேன்சுவை வைத்தாய் போற்றி ஓம் 530

ஓம் இசையினில் இனிமையைச் சேர்த்தாய் போற்றி ஓம்
ஓம் விசையினை வளியினில் சேர்த்தாய் போற்றி ஓம்
ஓம் உடலினில் உயிரினைச் சேர்த்தாய் போற்றி ஓம்
ஓம் உடலினில் ஐம்பொறி சேர்த்தாய் போற்றி ஓம்
ஓம் ஐம்பொறிக்குறுபுலன் சேர்த்தாய் போற்றி ஓம்
ஓம் ஐம்புலன் அறிமனம் சேர்த்தாய் போற்றி ஓம்
ஓம் அந்தக் கரணம் தந்தாய் போற்றி ஓம்
ஓம் உடம்பிலும் தத்துவம் உணர்த்தினை போற்றி ஓம்
ஓம் அடலுறும் ஆசைகள் பெருக்கினை போற்றி ஓம்
ஓம் அறிவளித் தாசைகள் மாய்ப்பாய் போற்றி ஓம் 540

ஓம் சந்தனச் சாந்தணி உகப்பாய் போற்றி ஓம்
ஓம் சிந்தனைக் கரிய திருவே போற்றி ஓம்
ஓம் மீன்விழியால் உயிர் வளர்ப்பாய் போற்றி ஓம்
ஓம் ஆமையைப் போலெமைக் காப்பாய் போற்றி ஓம்
ஓம் மீன்விழி கொண்ட மதுரையள் போற்றி ஓம்
ஓம் கடம்ப வனத்துறை குயிலே போற்றி ஓம்
ஓம் இமயத் துறையும் மயிலே போற்றி ஓம்
ஓம் விசும்பில் உதிக்கும் வெயிலே போற்றி ஓம்
ஓம் கமலத்துறையும் அன்னம் போற்றி ஓம்
ஓம் தன்வயம் ஆன தலைவீ போற்றி ஓம் 550

ஓம் தூய மேனியைக் கொண்டாய் போற்றி ஓம்
ஓம் இயற்கை உணர்வினளாயினை போற்றி ஓம்
ஓம் முற்றும் உணர்ந்த முதல்வீ போற்றி ஓம்
ஓம் தனக்கொரு பாசம் இல்லாய் போற்றி ஓம்
ஓம் பேரருள் பொழியும் பிராட்டி போற்றி ஓம்
ஓம் முடிவிலா ஆற்றல் உடையாய் போற்றி ஓம்
ஓம் வரம்பிலா இன்பம் உடையாய் போற்றி ஓம்
ஓம் தொழுபவர் உளத்தொளிர் விளக்கே போற்றி ஓம்
ஓம் அழுவார் கண்ணீர் துடைப்பாய் போற்றி ஓம்
ஓம் பரமென் றுனையே பற்றினம் போற்றி ஓம் 560

ஓம் தரமன் றென்றே தள்ளாய் போற்றி ஓம்
ஓம் அழகுக் கொருவரும் ஒவ்வாய் போற்றி ஓம்
ஓம் தொழுவார் துன்பம் தணிப்பாய் போற்றி ஓம்
ஓம் மற்றோர் பற்றிங் கறியோம் போற்றி ஓம்
ஓம் உற்றோம் உனக்கே அடியோம் போற்றி ஓம்
ஓம் நன்றே வரினும் பணிவோம் போற்றி ஓம்
ஓம் தீதே வரினும் பணிவோம் போற்றி ஓம்
ஓம் தனமும் கல்வியும் தருவாய் போற்றி ஓம்
ஓம் தளரா மனத்தைத் தருவாய் போற்றி ஓம்
ஓம் தெய்வ வடிவும் தருவாய் போற்றி ஓம் 570

ஓம் எய்ப்பினில் வைப்பாய் இலங்குவை போற்றி ஓம்
ஓம் கண்ணார் அமுதக் கடலே போற்றி ஓம்
ஓம் தண்ணார் அமுதத் தமிழே போற்றி ஓம்
ஓம் மூலாதாரத்து மண்ணினை போற்றி ஓம்
ஓம் மணிபூரகத்தே நீரினை போற்றி ஓம்
ஓம் சுவாதிட்டானத் தீயினை போற்றி ஓம்
ஓம் அநாகதத்தே வளியினை போற்றி ஓம்
ஓம் விசுத்தி தன்னில் வெளியினை போற்றி ஓம்
ஓம் ஆஞ்ஞா வில்லுறை மனத்தினை போற்றி ஓம்
ஓம் ஆயிர இதழ்நடு உடையாய் போற்றி ஓம் 580

ஓம் மூடனைக் கவியென ஆக்குவை போற்றி ஓம்
ஓம் புல்லனைப் பேரர சாக்குவை போற்றி ஓம்
ஓம் வறியனைச் செல்வன் ஆக்குவை போற்றி ஓம்
ஓம் பிணியனை நலம்தந் தாள்வாய் போற்றி ஓம்
ஓம் வலக்கண் கதிரெனக் கொண்டாய் போற்றி ஓம்
ஓம் இடக்கண் மதியெனக் கொண்டாய் போற்றி ஓம்
ஓம் வலக்கண் செந்நிறம் கொண்டாய் போற்றி ஓம்
ஓம் இடக்கண் வெண்ணிறம் கொண்டாய் போற்றி ஓம்

ஓம் பாற்கடல் அறிதுயில் புரிவாய் போற்றி ஓம்
ஓம் வேற்றடங் கண்ணுடை வேணி போற்றி ஓம் 590

ஓம் அருள்தரு கற்பகத் தருவே போற்றி ஓம்
ஓம் அருள்பழச் சுவையென இனிப்பாய் போற்றி ஓம்
ஓம் ஈயென இரவா நிலையருள் போற்றி ஓம்
ஓம் நின்னை இரக்கும் நினைவருள் போற்றி ஓம்
ஓம் இலையெனக் கூறாத் திறமருள் போற்றி ஓம்
ஓம் தலைவிநின் தாள்தொழ அருள்வாய் போற்றி ஓம்
ஓம் பக்திக் குவந்தருள் புரிவாய் போற்றி ஓம்
ஓம் சக்தி நின் திருவடி தருவாய் போற்றி ஓம்
ஓம் இமைப்பினும் நெஞ்சில் நீங்காய் போற்றி ஓம்
ஓம் அன்பெனும் வலைப்படு மலையே போற்றி ஓம் 600

ஓம் உரைமனங் கடந்த பெருவெளி போற்றி ஓம்
ஓம் பரையென இலங்கிடு பரம்பொருள் போற்றி ஓம்
ஓம் ஊக்கமும் உணர்ச்சியும் அருளினை போற்றி ஓம்
ஓம் ஆக்கமும் ஆக்கையும் அருளினை போற்றி ஓம்
ஓம் பிறவிக் கடலினைக் கடத்துவை போற்றி ஓம்
ஓம் மறவா நினைவைத் தருவாய் போற்றி ஓம்
ஓம் தத்துவம் கடந்த தனிப்பொருள் போற்றி ஓம்
ஓம் சுத்தசித் தாந்தப் பெருவெளி போற்றி ஓம்
ஓம் தகரமெய்ஞ் ஞானத் தனிவெளி போற்றி ஓம்
ஓம் சச்சிதா னந்தப் பரவெளி போற்றி ஓம் 610

ஓம் துரியம் கடந்த சுகமருள் போற்றி ஓம்
ஓம் துரியாதீத வைப்பே போற்றி ஓம்
ஓம் சாதி சமயம் கடந்தாய் போற்றி ஓம்
ஓம் ஆதிய நாதியாம் அரும்பொருள் போற்றி ஓம்
ஓம் பெரிதினும் பெரிதாய்ப் பிறங்கினை போற்றி ஓம்
ஓம் சிறிதினும் சிறிதாய்ச் சுருங்கினை போற்றி ஓம்
ஓம் அரிதினும் அரிதாய் அமைந்தனை போற்றி ஓம்
ஓம் தெரிவினும் தெரியாத் தெளிபொருள் போற்றி ஓம்
ஓம் கரும சித்திகள் தருவாய் போற்றி ஓம்
ஓம் யோக சித்திகள் அருள்வாய் போற்றி ஓம் 620

ஓம் ஞான சித்திகள் விரிப்பாய் போற்றி ஓம்
ஓம் அளப்பில சித்திகள் அளிப்பாய் போற்றி ஓம்
ஓம் தலங்கள் பலவிருந் தருள்வாய் போற்றி ஓம்
ஓம் காஞ்சியில் காமக் கண்ணினை போற்றி ஓம்
ஓம் காசியில் தடங்கண் பிராட்டி போற்றி ஓம்
ஓம் ஆலவாய் அங்கயற் கண்ணி போற்றி ஓம்

ஓம் ஆனைக் காவுறை அரசி போற்றி ஓம்
ஓம் சேதுபீடத்துறை செய்யாள் போற்றி ஓம்
ஓம் மாகாளத்துச் சங்கரி போற்றி ஓம்
ஓம் சோமநாதச் செல்வி போற்றி ஓம் 630

ஓம் மைசூர் சாமுண்டீசுவரி போற்றி ஓம்
ஓம் நந்திபுரத்தே நந்தினி போற்றி ஓம்
ஓம் நாகுலத் தலத்துறை நாயகி போற்றி ஓம்
ஓம் திருக்கா ளத்தியின் திருவே போற்றி ஓம்
ஓம் விந்திய நந்தா தேவி போற்றி ஓம்
ஓம் பாபநாசத்துறை விமலை போற்றி ஓம்
ஓம் ஆரூர்த் தலத்தே கமலை போற்றி ஓம்
ஓம் மணித்தீ வத்துறை அறிவே போற்றி ஓம்
ஓம் காமரூபக் கொழுந்தே போற்றி ஓம்
ஓம் புட்கர காயத்திரியினள் போற்றி ஓம் 640

ஓம் குமரித் துறையுறை கன்னி போற்றி ஓம்
ஓம் ஐயாறிருந்தறம் வளர்ப்பாய் போற்றி ஓம்
ஓம் கூர்ச்சர முப்புர மாலினி போற்றி ஓம்
ஓம் திரியம் பகத்துறை தேவி போற்றி ஓம்
ஓம் அண்ணாமலை உண்ணாமுலை போற்றி ஓம்
ஓம் திருக்கடவூர் அபிராமி போற்றி ஓம்
ஓம் குற்றாலத்துறை சக்தி போற்றி ஓம்
ஓம் உஞ்சை மாநகர்க் காளி போற்றி ஓம்
ஓம் சீநகர் சம்புத் திருவே போற்றி ஓம்
ஓம் சாரதை யெனத் திகழ்ந்தாய் போற்றி ஓம் 650

ஓம் மாராட் டத்தே பவானி போற்றி ஓம்
ஓம் கோலாப் பூர்வாழ் திருமகள் போற்றி ஓம்
ஓம் தேவிபட்டினத்தே திகழ்வாய் போற்றி ஓம்
ஓம் கேதா ரத்துறை கோதாய் போற்றி ஓம்
ஓம் பூரித் தலத்தே பயிரவி போற்றி ஓம்
ஓம் திருவெண் காட்டுறை திருவே போற்றி ஓம்
ஓம் சீர்சயி லத்துறை சேயிழை போற்றி ஓம்
ஓம் விருந்தா வனத்துக் கன்னி போற்றி ஓம்
ஓம் அத்தின புரத்தே அமர்ந்தாய் போற்றி ஓம்
ஓம் கொல்லூர் இலிங்க வடிவினை போற்றி ஓம் 660

ஓம் நீலப் பொருப்புறை யாமளை போற்றி ஓம்
ஓம் குருநாட் டகத்தே
குலவினை போற்றி ஓம்
ஓம் இமயத் தடத்தே தவத்தினை போற்றி ஓம்
ஓம் ஏமகூடத்து ஏந்திழை போற்றி ஓம்

ஓம் வங்கமா நிலத்துறை காளி போற்றி ஓம்
ஓம் நெல்லையில் காந்தி மதியே போற்றி ஓம்
ஓம் கங்கைத் துறையுறை நங்காய் போற்றி ஓம்
ஓம் நங்கை நல்லூர் அரசி போற்றி ஓம்
ஓம் ஒற்றியூர் வடிவுடை மணியே போற்றி ஓம்
ஓம் ஈங்கோய் மலையின் லலிதை போற்றி ஓம் 670

ஓம் வைதரணீ நதிக் கரையினள் போற்றி ஓம்
ஓம் வடுகர் மண்ணுள மணியே போற்றி ஓம்
ஓம் அம்பத்தூர்வாழ் வைணவி போற்றி ஓம்
ஓம் திருவேற்காட்டுறை திருவே போற்றி ஓம்
ஓம் சமயபுரத்தே மாரி போற்றி ஓம்
ஓம் மயிலைக் கற்பக வல்லி போற்றி ஓம்
ஓம் செந்தூரில்வேல் உகந்தாள் போற்றி ஓம்
ஓம் தஞ்சைமாரி அன்னாய் போற்றி ஓம்
ஓம் பெரியபாளையப் பாவாய் போற்றி ஓம்
ஓம் முல்லை வாயில் கொடியே போற்றி ஓம் 680

ஓம் பண்ணார் மாரி அன்னாய் போற்றி ஓம்
ஓம் மருவத் தூர்ப்பரா சக்தி போற்றி ஓம்
ஓம் ஒன்பான் இரவை உகப்பாய் போற்றி ஓம்
ஓம் ஒன்பான் கூலம் விளைப்பாய் போற்றி ஓம்
ஓம் ஒன்பான் நிதிகளை அளிப்பாய் போற்றி ஓம்
ஓம் ஒன்பான் தொளையுடல் தந்தாய் போற்றி ஓம்
ஓம் ஒன்பான் சுவையில் திளைப்பாய் போற்றி ஓம்
ஓம் ஒன்பான் கோள்களை இயக்குவை போற்றி ஓம்
ஓம் ஒன்பான் கோணத் துறைந்தாய் போற்றி ஓம்
ஓம் ஒன்பான் மணிகளை ஈந்தாய் போற்றி ஓம் 690

ஓம் ஒன்பான் எண்ணின் உயர்வாய் போற்றி ஓம்
ஓம் ஒன்றே எனநீ நின்றாய் போற்றி ஓம்
ஓம் ஒன்றே இரண்டென ஆனாய் போற்றி ஓம்
ஓம் மூன்றே குணமென முகிழ்த்தாய் போற்றி ஓம்
ஓம் ஆன்ற பொருள் நான்கமைத்தாய் போற்றி ஓம்
ஓம் ஐந்துடைத் தலைவரை ஆள்வாய் போற்றி ஓம்
ஓம் ஆறாதார நிலையினை போற்றி ஓம்
ஓம் ஏழுடை இசையில் இலங்கினை போற்றி ஓம்
ஓம் எட்டுடைத் திருவினர்த் தலைவீ போற்றி ஓம்
ஓம் எட்டுடை சக்திகள் தோற்றினை போற்றி ஓம் 700

ஓம் அனைத்துயிர் களில்நீ ஆன்மா போற்றி ஓம்

ஓம் மறைகளில் சாமவேதம் நீ போற்றி ஓம்
ஓம் இந்தியப் பொருள்களில் மனம்நீ போற்றி ஓம்
ஓம் உயிர்களில் உறையும் உணர்வுநீ போற்றி ஓம்
ஓம் அட்ட வசுக்களில் அக்கினி போற்றி ஓம்
ஓம் மலைகளில் மேரு மலைநீ போற்றி ஓம்
ஓம் சொற்களில் ஓமெனும் சொல்நீ போற்றி ஓம்
ஓம் மரங்களில் அரச மரம்நீ போற்றி ஓம்
ஓம் நதிகளில் கங்கை நதிநீ போற்றி ஓம்
ஓம் எழுத்துள் அகர எழுத்துநீ போற்றி ஓம் 710

ஓம் பண்களில் சாமகானநீ போற்றி ஓம்
ஓம் வண்ணங் களில் காயத்திரி போற்றி ஓம்
ஓம் மாதங்களில்நீ மார்கழி போற்றி ஓம்
ஓம் பருவங்களில் நீ இளவேனில் போற்றி ஓம்
ஓம் முறைவழி காப்பதில் செங்கோல் போற்றி ஓம்
ஓம் மறைவுடைப் பொருளில் மோனம் போற்றி ஓம்
ஓம் ஞானியர்க்குள்நீ ஞானம் போற்றி ஓம்
ஓம் ஆன்ம விளக்கம் அருள்வாய் போற்றி ஓம்
ஓம் மோன சுகத்தை அருள்வாய் போற்றி ஓம்
ஓம் வெள்ளரிப் பழ வீடளிப்பாய் போற்றி ஓம் 720

ஓம் கனிவித்தெம்மை ஆள்வாய் போற்றி ஓம்
ஓம் அறம்குலை போதெலாம் வருவாய் போற்றி ஓம்
ஓம் மறம்வளர் போதெலாம் வருவாய் போற்றி ஓம்
ஓம் தன்னைத் தானுணர் திறமருள் போற்றி ஓம்
ஓம் தன்னை வெல்லும் திறமருள் போற்றி ஓம்
ஓம் சென்றன வருவன அறிவாய் போற்றி ஓம்
ஓம் காமன் தனக்கெழில் தந்தாய் போற்றி ஓம்
ஓம் காமம் தந்துயிர் பெருக்கினை போற்றி ஓம்
ஓம் காமனைக் காய்ந்தநின் திருவடி போற்றி ஓம்
ஓம் மறைகள் தொழுநின் மாணடி போற்றி ஓம் 730

ஓம் குறைகளைக் களையுநின் காலடி போற்றி ஓம்
ஓம் நற்றாய் தந்தை நீயே போற்றி ஓம்
ஓம் சுற்றமும் நட்பும் நீயே போற்றி ஓம்
ஓம் புரப்போ ரில்லார்க் குறவே போற்றி ஓம்
ஓம் நின்னைச் சரணென் றடைந்தோம் போற்றி ஓம்
ஓம் நின்னைப் பணிந்தே உய்வோம் போற்றி ஓம்
ஓம் இரப்போர்க் கீவார் வைத்தாய் போற்றி ஓம்
ஓம் ஈவோர்க் கிதயம் வைத்தாய் போற்றி ஓம்
ஓம் பணத்துள மனத்தைப் பறிப்பாய் போற்றி ஓம்
ஓம் மனத்துள பணத்தைப் பறிப்பாய் போற்றி ஓம் 740

ஓம் திருநெறிப் பொருளியல் தெரிப்பாய் போற்றி ஓம்
ஓம் பெருநெறி உய்க்கும் பிராட்டி போற்றி ஓம்
ஓம் சாருயிர்க் கெல்லாம் தாரகம் போற்றி ஓம்
ஓம் ஆருயிர்க் கெல்லாம் அமிழ்தே போற்றி ஓம்
ஓம் உதிக்கும் செங்கதிர் ஒளியாய் போற்றி ஓம்
ஓம் மதிக்கும் மாமணி நிறத்தாய் போற்றி ஓம்
ஓம் மாதுள மேனியைக் கொண்டாய் போற்றி ஓம்
ஓம் துதிக்கும் மின்னல் கொடியாய் போற்றி ஓம்
ஓம் குங்கும மேனியைக் கொண்டாய் போற்றி ஓம்
ஓம் எங்களை உய்ப்பான் வந்தாய் போற்றி ஓம் 750

ஓம் மறைகள் தமக்கெலாம் வேர்நீ போற்றி ஓம்
ஓம் மறைகள் தமக்குக் கிளைநீ போற்றி ஓம்
ஓம் மறைகளின் கொழுந்தும் நீயே போற்றி ஓம்
ஓம் சென்னிய துன்றன் திருவடி போற்றி ஓம்
ஓம் மன்னிய மனத்துன் மந்திரம் போற்றி ஓம்
ஓம் விண்ணவர் போற்றும் வேல்விழி போற்றி ஓம்
ஓம் முனிவர் வணங்கும் முதல்வீ போற்றி ஓம்
ஓம் அரியரன் தொழவருள் அரசீ போற்றி ஓம்
ஓம் அயன்தொழ அருள்புரி அன்னாய் போற்றி ஓம்
ஓம் மயிடனைச் செற்ற மறத்தி போற்றி ஓம் 760

ஓம் வெயிலென ஒளிதரும் விழுப்பொருள் போற்றி ஓம்
ஓம் நின்றும் இருந்தும் நினைப்போம் போற்றி ஓம்
ஓம் நடந்தும் கிடந்தும் நினைப்போம் போற்றி ஓம்
ஓம் என்றும் வணங்குவ துன்தாள் போற்றி ஓம்
ஓம் எழுதா மறைமுடிப் பொருளே போற்றி ஓம்
ஓம் கண்ணிய தென்றும் நின்புகழ் போற்றி ஓம்
ஓம் கற்பன யாவுமுன் திருப்பெயர் போற்றி ஓம்
ஓம் ஈரேழ் புவனம் பூத்தாய் போற்றி ஓம்
ஓம் பூத்த புவனம் காத்தாய் போற்றி ஓம்
ஓம் புவனத் துள்ளே கரந்தாய் போற்றி ஓம் 770

ஓம் கறைக்கண் டற்கே மூத்தாய் போற்றி ஓம்
ஓம் மூவா முகுந்தற் கிளையாய் போற்றி ஓம்
ஓம் சக்தியின் சிவத்தைப் படைத்தாய் போற்றி ஓம்
ஓம் சக்தியின் கிளைபல வகுத்தாய் போற்றி ஓம்
ஓம் பரிமள யாமளைப் பைங்கிளி போற்றி ஓம்
ஓம் இருவினை நீக்கும் ஒருபொருள் போற்றி ஓம்
ஓம் ஒளியும் ஒளிரும் ஒளிக்கிடம் போற்றி ஓம்
ஓம் ஒன்றும் இல்லா வெளியே போற்றி ஓம்
ஓம் வெளிமுதல் பூதமாய் விரிந்தாய் போற்றி ஓம்

ஓம் வியப்புடை வடிவம் உடையாய் போற்றி ஓம் 780

ஓம் கயத்துள தாமரை முகத்தாய் போற்றி ஓம்
ஓம் அவ்வியம் தீர்த்தெமை ஆண்டாய் போற்றி ஓம்
ஓம் வெவ்விய காலன் வரின்வா போற்றி ஓம்
ஓம் அமிழ்தூர் திங்களில் உறைவாய் போற்றி ஓம்
ஓம் அமிழ்தூர் பாற்கடல் உறைவாய் போற்றி ஓம்
ஓம் தமியேம் நெஞ்சில் உறைவாய் போற்றி ஓம்
ஓம் தமியேம் தமக்குத் துணைநீ போற்றி ஓம்
ஓம் எம்மையும் ஆளாய் உடையாய் போற்றி ஓம்
ஓம் மங்கல மெல்லாம் தருவாய் போற்றி ஓம்
ஓம் மங்கல வடிவுடை மாண்பே போற்றி ஓம் 790

ஓம் சங்கின் வளையணி செங்கையள் போற்றி ஓம்
ஓம் மறைமலர் பரப்பும் மணத்தாய் போற்றி ஓம்
ஓம் கறையிலாக் கவினுடை நிலவே போற்றி ஓம்
ஓம் மணியே! மணியின் ஒளியே போற்றி ஓம்
ஓம் மணியின் புனைந்த அணியே போற்றி ஓம்
ஓம் அணியும் அணிக்குள் அழகே போற்றி ஓம்
ஓம் அணுகார் தமக்குப் பிணியே போற்றி ஓம்
ஓம் அணுகுவர் தமக்கு மருந்தே போற்றி ஓம்
ஓம் நின்னின் பிறரைப் பணியோம் போற்றி ஓம்
ஓம் நின்னைப் பணிந்தே ஏத்துவம் போற்றி ஓம் 800

ஓம் வஞ்சப் பிறவியை உடைப்பாய் போற்றி ஓம்
ஓம் நெஞ்சத்தழுக்கைத் துடைப்பாய் போற்றி ஓம்
ஓம் சொல்லும் பொருளும் ஆனாய் போற்றி ஓம்
ஓம் சொல்மலர் மாலை கொண் டேத்துவம் போற்றி ஓம்
ஓந் செல்லும் தவநெறி சேர்ப்பாய் போற்றி ஓம்
ஓம் அல்லும் பகலுமுன் நினைவருள் போற்றி ஓம்
ஓம் சித்திகள் தருபவள் நீயே போற்றி ஓம்
ஓம் முக்தியைத் தருபவள் நீயே போற்றி ஓம்
ஓம் முக்திக்கும் ஒருவித்தே போற்றி ஓம்
ஓம் வித்தினுள் முளைக்கும் அறிவே போற்றி ஓம் 810
ஓம் தீயன செய்யினும் பொறுப்பாய் போற்றி ஓம்
ஓம் தாயாய் இருந்தெமைக் காப்பாய் போற்றி ஓம்
ஓம் கடல்நடு வீழினும் காப்பாய் போற்றி ஓம்
ஓம் படைநடு வணுகினும் காப்பாய் போற்றி ஓம்
ஓம் பொருளாய்ப் பொலியும் பொருளே போற்றி ஓம்
ஓம் பொருளான் முடியும் போகம் போற்றி ஓம்
ஓம் பொருளால் மருளைத் தருவாய் போற்றி ஓம்

ஓம் மருளின் தெளிவைத் தருவாய் போற்றி ஓம்
ஓம் மறையெனும் சிலம்பணி தாள்கள் போற்றி ஓம்
ஓம் மறைதொழச் சிவந்த திருவடி போற்றி ஓம் 820

ஓம் கடவுளர்க் கெல்லாம் தாய்நீ போற்றி ஓம்
ஓம் படையென ஐங்கணை ஏந்தினை போற்றி ஓம்
ஓம் குரம்பை விழும்போ தணைவாய் போற்றி ஓம்
ஓம் நரம்புறை இசைவடி வானாய் போற்றி ஓம்
ஓம் அரம்பையர் கணந்தொழும் அழகே போற்றி ஓம்
ஓம் முரணுடை அசுரரை முனிந்தாய் போற்றி ஓம்
ஓம் மரணமும் பிறவியும் தடுப்பாய் போற்றி ஓம்
ஓம் சரண மென்போர்க்கு அரணே போற்றி ஓம்
ஓம் நாயகி நான்முகி நீயே போற்றி ஓம்
ஓம் நாரா யணியும் நீயே போற்றி ஓம் 830

ஓம் சாம்பவி சங்கரி நீயே போற்றி ஓம்
ஓம் மாலினி சூலினி நீயே போற்றி ஓம்
ஓம் மாதங் கீயெனும் சக்தி போற்றி ஓம்
ஓம் வாராகீயெனும் நிலமகள் போற்றி ஓம்
ஓம் சின்னஞ் சிறிய இடையாய் போற்றி ஓம்
ஓம் கன்னங் கரிய குழலாய் போற்றி ஓம்
ஓம் தன்னந் தனியார் தவமே போற்றி ஓம்
ஓம் மின்னா யிரமுடை மெய்யாய் போற்றி ஓம்
ஓம் ஒன்றாய் அரும்பிய ஒருபொருள் போற்றி ஓம்
ஓம் பலவாய் விரிந்த பரம்பொருள் போற்றி ஓம் 840

ஓம் தஞ்சம் நின்னின் வேறிலை போற்றி ஓம்
ஓம் நெஞ்சம் உனக்கே வைத்தோம் போற்றி ஓம்
ஓம் அறுவகைச் சமயத் தலைவீ போற்றி ஓம்
ஓம் குறியும் குணமும் கடந்தாய் போற்றி ஓம்
ஓம் வஞ்சமில் சுற்றம் அருள்வாய் போற்றி ஓம்
ஓம் திரிபுரை எனும்பெயர் பெற்றாய் போற்றி ஓம்
ஓம் விழிக்கே அருளுண் டுனக்கே போற்றி ஓம்
ஓம் வழிபட நெஞ்சுண் டெமக்கே போற்றி ஓம்
ஓம் அடியார் கூட்டில் சேர்ப்பாய் போற்றி ஓம்
ஓம் செடியென வளர்வினை அறுப்பாய் போற்றி ஓம் 850

ஓம் உற்றநோய் எல்லாம் தீர்ப்பாய் போற்றி ஓம்
ஓம் உறுநோய் தீர்க்கும் உறுதுணை போற்றி ஓம்
ஓம் அற்றார்க் கலர்ந்தார்க் கருள்வாய் போற்றி ஓம்
ஓம் கற்றார் ஏத்தும் கற்பகம் போற்றி ஓம்
ஓம் கடலமுதே செங்கரும்பே போற்றி ஓம்

ஓம் மடலவிழ் ஞான மலரே போற்றி ஓம்
ஓம் மானேர் விழிமலை மானே போற்றி ஓம்
ஓம் வானே கருணை வடிவே போற்றி ஓம்
ஓம் தேனே! தேனுறு சுவையே போற்றி ஓம்
ஓம் வாயார் அமுத வடிவே போற்றி ஓம் 860

ஓம் காமக் கடலின் மீட்பாய் போற்றி ஓம்
ஓம் வெகுளித் தீயின் மீட்பாய் போற்றி ஓம்
ஓம் மயக்கச் சேற்றின் மீட்பாய் போற்றி ஓம்
ஓம் சாத்திரங் கோடி வைத்தாய் போற்றி ஓம்
ஓம் மீத்திற ஞானம் வைத்தாய் போற்றி ஓம்
ஓம் புற்றிடங் கொண்டே எழுந்தாய் போற்றி ஓம்
ஓம் பற்றிலா நெஞ்சை அருள்வாய் போற்றி ஓம்
ஓம் வேம்பால் பன்னோய் தீர்ப்பாய் போற்றி ஓம்
ஓந் தேம்பும் பல்லுயிர் தேற்றுவை போற்றி ஓம்
ஓம் தனிமுதல் எனநீ ஆனாய் போற்றி ஓம் 870

ஓம் தானே மருவூர்ப் பூத்தாய் போற்றி ஓம்
ஓம் பருப்பொருள் அனைத்தும் நீயே போற்றி ஓம்
ஓம் நுண்பொருள் அனைத்தும் நீயே போற்றி ஓம்
ஓம் உள்ளொளி தருபவள் நீயே போற்றி ஓம்
ஓம் உயர்குணங் கடந்தே உயர்வாய் போற்றி ஓம்
ஓம் பாரெனப் பரந்தவள் நீயே போற்றி ஓம்
ஓம் நீரென நெளிபவள் நீயே போற்றி ஓம்
ஓம் காற்றென அசைபவள் நீயே போற்றி ஓம்
ஓம் தீயெனத் திகழ்பவள் நீயே போற்றி ஓம்
ஓம் விசும்பென விரிந்தவள் நீயே போற்றி ஓம் 880

ஓம் வான்திரி புள்ளெலாம் நீயே போற்றி ஓம்
ஓம் வானிடை மீனெலாம் நீயே போற்றி ஓம்
ஓம் கானிழல் மரமெலாம் நீயே போற்றி ஓம்
ஓம் மண்திரி விலங்கெலாம் நீயே போற்றி ஓம்
ஓம் வெட்ட வெளியின் விரிவுநீ போற்றி ஓம்
ஓம் கவிஞர் காவியப் பொருள்நீ போற்றி ஓம்
ஓம் இன்னிசை மாதர் இசைநீ போற்றி ஓம்
ஓம் மந்திரம் உறையும் பொருள்நீ போற்றி ஓம்
ஓம் அண்டம் பலவும் ஆக்கினை போற்றி ஓம்
ஓம் சாட்டையில் அண்டம் சுழற்றுவை போற்றி ஓம் 890

ஓம் நானெனும் பொய்யை நடத்துவை போற்றி ஓம்
ஓம் பிஞ்சினில் துவர்ப்பை வைத்தாய் போற்றி ஓம்
ஓம் காயினில் புளிப்பை வைத்தாய் போற்றி ஓம்

ஓம் கனியினில் இனிப்பை வைத்தாய் போற்றி ஓம்
ஓம் கனிந்தபின் காம்பினின் கழற்றுவை போற்றி ஓம்
ஓந் கனியிலும் தத்துவம் காட்டினை போற்றி ஓம்
ஓம் கனியெனக் கனிந்திட வைப்பாய் போற்றி ஓம்
ஓந் கனிந்தபின் எம்மையும் கழற்றுவை போற்றி ஓம்
ஓம் இருள்சேர் இருவினை தணிப்பாய் போற்றி ஓம்
ஓம் பொருள்சேர் நின்புகழ் போற்றுவம் போற்றி ஓம் 900

ஓம் அருள்நனி சுரக்கும் அமுதே போற்றி ஓம்
ஓம் பரமா னந்தப் பழங்கடல் போற்றி ஓம்
ஓம் நச்சர வாட்டிய நங்காய் போற்றி ஓம்
ஓம் கற்பமும் இறுதியும் காண்பாய் போற்றி ஓம்
ஓம் புறத்தைம் பூதம் வகுத்தாய் போற்றி ஓம்
ஓம் உடலைம் பூதம் வகுத்தாய் போற்றி ஓம்
ஓம் ஐயிரு வளியுடல் வகுத்தாய் போற்றி ஓம்
ஓம் ஐவகை உடம்பை அமைத்தாய் போற்றி ஓம்
ஓம் வாழ்வும் வைப்பும் நீயே போற்றி ஓம்
ஓம் கருமுகில் ஆகிய கண்ணே! போற்றி ஓம் 910

ஓம் மறையோர் கோல நெறியே போற்றி ஓம்
ஓம் பஞ்சேர் மெல்லடிப் பிராட்டி போற்றி ஓம்
ஓம் மருவிய கருணை மலையே போற்றி ஓம்
ஓம் கலந்தார்க் கருளும் கற்பகம் போற்றி ஓம்
ஓம் பொன்னும் பொருளும் தருவாய் போற்றி ஓம்
ஓம் போகமும் திருவும் புணர்ப்பாய் போற்றி ஓம்
ஓம் பின்னையெம் பிழைகள் பொறுப்பாய் போற்றி ஓம்
ஓம் பிழையெலாம் தவிரப் பணிப்பாய் போற்றி ஓம்
ஓம் வேண்டத் தக்க தறிவோய் போற்றி ஓம்
ஓம் வேண்டும் பொருளைத் தருவோய் போற்றி ஓம் 920

ஓம் தொழுவார் துயர்தீர் துணையே போற்றி ஓம்
ஓம் அழுதால் நின்னைப் பெறலாம் போற்றி ஓம்
ஓம் பால் நினைந்தூட்டும் தாயே போற்றி ஓம்
ஓம் நால்வகை நெறியால் ஆள்வாய் போற்றி ஓம்
ஓம் மெய்யருள் மெய்ப்பொருள் ஆவாய் போற்றி ஓம்
ஓம் பொய்யருள் பொய்ப்பொருள் ஆவாய் போற்றி ஓம்
ஓம் ஆடிப்பூரம் உகந்தாய் போற்றி ஓம்
ஓம் பாடித் தொழுதால் பாங்கினை போற்றி ஓம்
ஓம் எம்முளக் கோயில் உறைவாய் போற்றி ஓம்
ஓம் பண்ணின் நேர்மொழிப் பாவாய் போற்றி ஓம் 930

ஓம் சுடரொளி காட்டி ஆண்டாய் போற்றி ஓம்
ஓம் அடியவர் கனவில் தோன்றுவை போற்றி ஓம்
ஓம் அறப்பயிர் செழித்திட அருள்வாய் போற்றி ஓம்
ஓம் மறக்களை வேரொடு மாய்ப்பாய் போற்றி ஓம்
ஓம் நீர்வளம் நிலவளம் பெருக்குக போற்றி ஓம்
ஓம் பாரிடைப் பல்வளம் அருள்வாய் போற்றி ஓம்
ஓம் ஏரிடைப் பல்வளம் இயற்றுக போற்றி ஓம்
ஓம் அறிவியல் புதுமைகள் ஆக்குக போற்றி ஓம்
ஓம் அறிவியல் தீமைகள் அறுப்பாய் போற்றி ஓம்
ஓம் அரசியல் அறநெறி வளர்ப்பாய் போற்றி ஓம் 940

ஓம் அரசியல் வெம்மைகள் தணிப்பாய் போற்றி ஓம்
ஓம் செங்கோ லாட்சியை அருள்வாய் போற்றி ஓம்
ஓம் செங்கோல் நெறியில் செலுத்துக போற்றி ஓம்
ஓம் அன்பும் அறமும் வளர்ப்பாய் போற்றி ஓம்
ஓம் துன்பும் வன்பும் துடைப்பாய் போற்றி ஓம்
ஓம் அருள்நெறி தழைத்திட அருள்வாய் போற்றி ஓம்
ஓம் மருள்நெறி எல்லாம் மறைப்பாய் போற்றி ஓம்
ஓம் ஆன்மிகப்பயிர் வளர்ப்பாய் போற்றி ஓம்
ஓம் ஆன்மா எனஉறை அரசீ போற்றி ஓம்
ஓம் அகத்துறை பேய்களை அகற்றுக போற்றி ஓம் 950

ஓம் புறத்துறு பேய்களைப் போக்குக போற்றி ஓம்
ஓம் பக்தி வெள்ளத்தைச் சுரப்பாய் போற்றி ஓம்
ஓம் சக்திநின் னருள்மழை பொழிவாய் போற்றி ஓம்
ஓம் மானிடம் செழிக்க வந்தாய் போற்றி ஓம்
ஓம் ஆன்ம நேயம் வளர்ப்பாய் போற்றி ஓம்
ஓம் கலகமும் போர்களும் களைவாய் போற்றி ஓம்
ஓம் கலைநலம் மனநலம் பெருக்காய் போற்றி ஓம்
ஓம் புல்முதல் உயிர்க்குலம் காப்பாய் போற்றி ஓம்
ஓம் கல்லினுள் தேரையைக் காப்பாய் போற்றி ஓம்
ஓம் கருவிலும் உயிர்களைக் காப்பாய் போற்றி ஓம் 960

ஓம் நாத நாதாந்த முடிவே போற்றி ஓம்
ஓம் போதமுங் காணாப் போதமே போற்றி ஓம்
ஓம் தொடுக்கும் பாடற் பயனே போற்றி ஓம்
ஓம் வேடந் தாங்கல் ரேணுகா போற்றி ஓம்
ஓம் தமிழின் ஒழுகும் சுவையே போற்றி ஓம்
ஓம் அமிழ்தெனத் தமிழைத் தந்தாய் போற்றி ஓம்
ஓம் அகந்தைக் கிழங்கை அகழ்வாய் போற்றி ஓம்
ஓம் அடியவர் மனக்குகை அமர்ந்தாய் போற்றி ஓம்

ஓம் மங்கலை பிங்கலை நீயே போற்றி ஓம்
ஓம் பயிரவி பஞ்சமி நீயே போற்றி ஓம் 970

ஓம் வயிரவி வைணவி நீயே போற்றி ஓம்
ஓம் சாம்பவி சங்கரி நீயே போற்றி ஓம்
ஓம் கொடுமை அழிக்கும் காளீ போற்றி ஓம்
ஓம் அடலுறும் ஐம்புலன் அடக்குவை போற்றி ஓம்
ஓம் பித்தம் தெளிக்கும் மருந்தே போற்றி ஓம்
ஓம் சித்தம் தெளிக்கும் செம்பொருள் போற்றி ஓம்
ஓம் ஆத்திகப் பயிரை வளர்ப்பாய் போற்றி ஓம்
ஓம் நாத்திகக் களையைக் களைவாய் போற்றி ஓம்
ஓம் நாத்திகர் தம்மையும் ஆள்வாய் போற்றி ஓம்
ஓம் ஞானந் தருநல்மருந்தே போற்றி ஓம் 980

ஓம் ஞான வெளியில் நடிப்பாய் போற்றி ஓம்
ஓம் எம்முயிர் காக்கும் மருந்தே போற்றி ஓம்
ஓம் எண்ணுக் கடங்கா மருந்தே போற்றி ஓம்
ஓம் ஐம்மலம் நீக்கும் மருந்தே போற்றி ஓம்
ஓம் மறைகள் தேடுநல் மலரடி போற்றி ஓம்
ஓம் அடியவர் உகக்கும் சிலம்படி போற்றி ஓம்
ஓம் மாதவர் தேடிய திருவடி போற்றி ஓம்
ஓம் வல்வினை தீர்க்கும் நின்னடி போற்றி ஓம்
ஓம் ஐந்தொழில் புரியும் மெல்லடி போற்றி ஓம்
ஓம் ஆருயிர் காக்கும் தாள்கள் போற்றி ஓம் 990

ஓம் உளத்துறு நோய்களைக் களைவாய் போற்றி ஓம்
ஓம் உடலுறு நோய்களைக் களைவாய் போற்றி ஓம்
ஓம் கண்ணுறு நோய்களின் காப்பாய் போற்றி ஓம்
ஓம் செவியுறு நோய்களின் காப்பாய் போற்றி ஓம்
ஓம் மூக்குறு நோய்களின் காப்பாய் போற்றி ஓம்
ஓம் வாயுறு நோய்களைக் களைவாய் போற்றி ஓம்
ஓம் நரம்புறு நோய்களைத் தவிர்ப்பாய் போற்றி ஓம்
ஓம் தசையுறு நோய்களைத் தடுப்பாய் போற்றி ஓம்
ஓம் வயிற்றடை நோய்களைக் களைவாய் போற்றி ஓம்
ஓம் கையொடு கால்நோய் களைவாய் போற்றி ஓம் 1000

ஓம் நச்சுடை உயிர்களின் காப்பாய் போற்றி ஓம்
ஓம் தீக்குணப் பேய்களின் காப்பாய் போற்றி ஓம்
ஓம் தீயவர் கொடுமை தகர்ப்பாய் போற்றி ஓம்
ஓம் பிறவியென் றொருநோய் போக்குவை போற்றி ஓம்
ஓம் சும்மா இருக்கும் சுகமருள் போற்றி ஓம்

| | | |
|---|---|---|
| ஓம் | நீதரும் வாய்கொண் டேத்தினம் | போற்றி ஓம் |
| ஓம் | நீதரும் அறிவுகொண் டிறைஞ்சினம் | போற்றி ஓம் |
| ஓம் | எல்லாம் நின்செயல் போற்றி | போற்றி ஓம் 1008 |

ஓம் சக்தி! – ஓம் சக்தி! – ஓம் சக்தி! – ஓம்!
ஓம் சக்தி! – ஓம் சக்தி! – ஓம் சக்தி! – ஓம்!
ஓம் சக்தி! – ஓம் சக்தி! – ஓம் சக்தி! – ஓம்!
ஓம்! ஓம்! ஓம்!



Contents of this site © copyright 2015
www.omsakthiamma.org.
All rights reserved.